## FRANKLIN LAW FIRM

**நினைவில் கொள்ள வேண்டியவை**

Franklin Hall LLP ஐ நியமித்தவுடன்:

1. எங்கள் நிறுவனத்தின் உறுப்பினர்கள், மற்றும் நாங்கள் கேட்டுக்கொண்டபடி நீங்கள் கலந்தாய்வு செய்ய வேண்டிய மருத்துவர்கள் (அல்லது பிற தொழில் நெறிஞர்கள்) தவிர்த்து வேறு எவரிடமும் உங்கள் வழக்கைப் பற்றி நீங்கள் பேசக் கூடாது என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம்.
2. இணையத்தை பயன்படுத்துகையில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும் மற்றும், முக்கியமாக, காப்புறுதி நிறுவனங்கள் கண்காணிக்கக்கூடிய Facebook, YouTube அல்லது வலைப்பதிவுகளில் வெளியிடும் செய்திகளில் கவனமுடம் இருக்கவும்.
   எல்லா செலவுகளையும் பதிவு செய்யவும் மற்றும் எல்லா ரசீதுகளையும் பத்திரமாக வைத்திருக்கவும். இவற்றை எங்களிடம் குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ந்து ஒப்படைக்குமாறு உங்களைக் கேட்போம்.
3. உங்கள் எல்லா மருத்துவ மற்றும்/அல்லது பணி நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து எங்களுக்குத் தெரிவிக்கவும்.
4. உங்கள் குடும்ப மருத்துவர் உங்களைப் பரிந்துரைக்கும் தொழில் நெறிஞர்களின் பெயர்கள், சோதனைகள், அல்லது மற்ற ஆலோசனைகள் குறித்த தகவல்களை எங்கள் கோப்புகளைப் புதிப்பித்து வைக்க எங்களிடம் அளிக்கவும்.
5. நீங்கள் வேலைக்குச் செல்வதை நிறுத்தினாலோ, தொடர்ந்தாலோ அல்லது வேலையை மாற்றினாலோ எங்களுக்குத் தெரிவிக்கவும்.
   உங்கள் தொலைபேசி எண் மாறினாலோ அல்லது மாற்றினாலோ அது குறித்து எங்கள் அலுவலகத்திற்குத் தெரிவிக்கவும்.

*ஒவ்வொரு வழக்கும் வித்தியாசப்பட்டாலும், எங்களுடைய பொதுவான குறிக்கோள் உங்கள் வழக்கில் சிறந்த முடிவைப் பெறுவதேயாகும். உங்களுக்கு ஏதேனும் கேள்வி அல்லது பிரச்சினை இருந்தால், தயவு செய்து இன்றே எங்களைத் தொடர்பு கொள்ளவும்.*

6. கண்காணிப்பது சட்டப்படி அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதையும், உங்கள் மருத்துவரின் பரிந்துரைக்கு மாறாக, அல்லது உங்கள் விபத்தினால் ஏற்பட்ட இயலாமைகள் அல்லது ஊனங்கள் பற்றி நீங்கள் அளித்த சான்றுகளுக்கு மாறாக நீங்கள் செயல்படுவதை எதிர்பார்த்து காப்புறுதி நிறுவனம் உங்களை கண்காணிக்கலாம் என்பதையும் அறியவும்.

   தனியார் புலனாய்வு அதிகாரிகள் உங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளக்கூடாது. உங்களை எவரேனும் பின் தொடர்வதை அல்லது உங்களுடன் இருப்பதை நீங்கள் அசௌகரியமாக உணர்ந்தால், காவல் துறையிடம் முறையிட நாங்கள் பரிந்துரைக்கிறோம்.
   கண்காணிப்பு அதிக செலவு வாய்ந்த நடைமுறையாகும், மற்றும் அது ஒரு வழக்கமாக குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்படும்.
7. எங்களுடைய வழக்கறிஞர் தொடர்புரிமைக் காலத்தின் போது, எங்கள் அலுவலக ஊழியர்கள் உங்களைத் தொடர்பு கொள்ளக் கூடும், மற்றும் உங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் மற்றும் கவலைகள் இருந்தால் இந்த தனிநபர்களை நீங்கள் தொடர்புகொள்ள உங்களுக்கு எந்தத் தடையும் இல்லை. எங்கள் வழக்கறிஞர்களும் உங்களுக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் பிரச்சினைகளைப் பற்றி உங்களுடன் விவாதிக்கத் தயாராக உள்ளார்கள்.

*ஒவ்வொரு வழக்கும் வித்தியாசப்பட்டாலும், எங்களுடைய பொதுவான குறிக்கோள் உங்கள் வழக்கில் சிறந்த முடிவைப் பெறுவதேயாகும். உங்களுக்கு ஏதேனும் கேள்வி அல்லது பிரச்சினை இருந்தால், தயவு செய்து இன்றே எங்களைத் தொடர்பு கொள்ளவும்.*